## தலைப்பு 307 - மோட்டார் வாகனத் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகனத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் வாகன திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

---

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

---

நிதிச் செயலாற்றல் கூற்றில் திணைக்களத்திற்குரிய வருமான பெறுவனவுகளை அறிக்கையிடும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|---|
| (i) | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 273,262,450 தொகையை உறுதிப்படுத்துவதற்குரிய பதிவுகள் அந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகையின் விரிவான பட்டோலைகள் நிதிக்கூற்றுக்களின் பின்னிணைப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டியமை.<br><br>கொடுக்கல் வாங்கல்கள் | நிதிச் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதியினை திருத்தி இணக்கங்கள் தெளிவுபடுத்தி கூற்றொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 02 வருமானக் குறியீடுகளுக்குரிய 2018 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீட்டிற்கமைய வருமானம் மற்றும் வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் ஆகியவற்றுக்கிடையே ரூபா 305 மில்லியனான இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று காணப்பட்டது. | உரிய பதிவேடுகள் மற்றும் மூல ஆவணங்களுடன் ஒப்பீட்டு கணக்கு வைத்தல். | கணக்குகளை முன்வைக்கும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக மதிப்பிடப்பட்ட வருமானம் குறைவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| (iii | நிதிச் செயலாற்றல் கூற்றுக்கமைய திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் அதற்குரிய திறைசேரியில் அச்சிடப்பட்ட கூற்றுக்களுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 10,094,325,952 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பதிவேடுகள் மற்றும் மூல ஆவணங்களுடன் இணக்கம் செய்யப்பட்டு கணக்கு வைத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (iv | நிதிச் செயலாற்றல் கூற்றிலிருந்தான கட்டுநிதி மீதியை தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்டிருந்த சீராக்கல் கணக்கு உரிய முறையில் சமப்படுத்தப்பட்டிராததுடன், அந்த கணக்கின் வரவுப் பதிவுகளினதும், செலவுப் பதிவுகளினதும் கூட்டுத்தொகைக்கிடையேயான வேறுபாடு அல்லது சீராக்கல் கணக்கின் மீதி ரூபா 47,494,026 ஆகும். எனினும், திறைசேரி கணனி பதிவுகளுக்கமைய கட்டுநிதிக்கணக்கின் மீதி ரூபா 46,544,011 ஆக நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய ஏற்பட்டிருந்த ரூபா 950,015 ஆன வேறுபாட்டிற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.6.2 நிதி நிலமைக்கூற்று

----------------------------

நிதி நிலமைக்கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 47,743,373 தொகையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியொன்று நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் தவறவிடப்படாத வகையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்த பெறுமதிகள் திறைசேரிப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிராமையால் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் திறைசேரியின் குறிப்புக்ள நாளதுவரையாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியிலான மீதிகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றுக்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்கான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் அதற்குரிய திறைசேரி அச்சீட்டுப் பதிவுகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 2,481,058 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பதிவேடுகள் மற்றும் மூலப் பதிவேடுகளுடன் இணக்கம் செய்யப்பட்டு கணக்கு வைத்தல். | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு இணக்கக்கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் 2019 மே 30 ஆந் திகதி | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன்.<br><br>கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்களை வழங்குவதற்கான |

| | | |
|---|---|---|
| வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாப் பதிவேடானது உரிய காலத்தின் பின் பரிசோதிக்கப்பட்டு கிடைக்கப்பெற்றுள்ள கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அந்த வினாக்களுக்கு உடனடியாக பதில்கள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு பதில்கள் வழங்கத் தாமதமாகும் வினாக்கள் காணப்படுமாயின் அவற்றுக்காக இடை அறிக்கையொன்றினை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |

**1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>திணைக்களத்தின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு உரிய காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில்கள் வழங்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 1.6.1(ஈ) பிரிவின் பிரகாரம் 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு கணக்காய்வு ஐயவினாக்களுக்கு துரிதமாக பதில்கள் வழங்கப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| அவதானிப்புகள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப்பிரமாணம் 118 | பல்வேறு வருமான மூலங்களின் கீழ் நிதி சேகரிக்கும் போது தவறுகளினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 245,800 மீளாய்வாண்டினுள் மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக அரச கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு வருமானத்திலிருந்து மீளச் செலுத்துவதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல். | இந்த மீளச் செலுத்தல்கள் திறைசேரியின் புத்தகங்களில் வருமானத்தை கணக்கு வைப்பதற்கு முன்னர் உரிய மாதத்தினுள் இடம்பெற்றுள்ளது. |
| (ii) நிதிப்பிரமாணம் 165(4) | வெரஹெர அலுவலகத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் பணமானது பதவிநிலை உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் பெட்டகத்தினுள் இடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சிறந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றாக கிராப்பர் பிரிவிற்கு பொறுப்பான உதவி ஆணையாளரின் பொறுப்பில் பாதுகாப்பு பெட்டகத்தின் சாவியொன்று காணப்பட்ட போதிலும், அனைத்து சாவிகளும் சில்லறைக் காசாளரின் பொறுப்பில் காணப்பட்டது. | சாவிகள் மற்றும் காசுக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறையான மேற்பார்வையொன்றினை பேண வேண்டியமை. | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) நிதிப்பிரமாணம் 175(1) மற்றும் (2) | பல்வேறு 08 விடயங்களின் கீழ் வருமானம் சேகரிக்கப்பட்ட போதிலும், அவை ஒரே பதிவேட்டில் பதிவு செய்யப்படாமையால், ஒவ்வொரு விடயத்தின் கீழும் கிடைத்த பணங்களை வெவ்வேறாக இனங்காண முடியாதவாறு இருந்தது. இதன் காரணமாக நிலுவை வருமானங்கள் தொடர்பான சரியான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல், அவற்றை அறவிடுவதற்கு ஏற்பாடுகளை ஈடுபடுத்துதல் மற்றும் நிலுவை வருமானங்களை சரியாக அறவிடுதல் நிச்சயமற்றதாக இருந்தது. | சேகரிக்கப்பட்ட வருமான மூலங்களை இனங்காணக்கூடிய முறையில் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். | வருமானங்களை சேகரித்தல் தொடர்பான அறிக்கைகளை வகைப்படுத்தி சரியாக பேணிச் செல்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ) அரச நிதிக் கொள்கைகள் சுற்றறிக்கை** | | | |
| --- 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04(அ) மற்றும் (ஆ) பந்திகள் | 1995 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலும் நிலுவை வருமானங்களை தெளிவாக காண்பிக்கும் வகையில் முறையான அறிக்கைகள் பேணப்படாதிருந்ததுடன், அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானங்களை தொடர்ந்தும் சேகரிப்பதனை தடுப்பதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது, நிதிக்கூற்றுக்களுக்கமைய ஒட்டுமொத்த நிலுவை வருமானம் வருடாந்தம் அதிகரிக்கும் போக்கொன்று அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல். | நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் சிக்கல்கள் காணப்பட்டமையால், வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், எதிர்காலத்தில் நிலுவை வருமான அரையாண்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு பதிவு செய்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டிற்கமைய, வருமானக் குறியீட்டு இலக்கம் 1003-07-09 இன் கீழ் காபன் வரி அறவீட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 2,500 மில்லியன்கள் ஆன போதிலும், அந்த உத்தேச வருமானத்தை | ஆண்டினுள் நிறைவேற்றப்படக்கூடிய பணிகள் மாத்திரம் மதிப்பிடப்படல் | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை |

| | | |
|---|---|---|
| ஈட்டுதல் பூச்சியமாக கருதி மதிப்பீடுகளை திருத்துமாறு திணைக்களத்தினால் அரச நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. காபன் வரி அறவிடலை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் அரசினால் கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டிராமையால் இதற்கு காரணமாக அமைந்திருந்தது. நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த வருமானக் கூற்றில் இந்த உத்தேச வருமானம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) வருமானக் குறியீடு 1003-01-00 இன் கீழான ஆடம்பர மோட்டார் வாகன வரி தொடர்பில் 1995 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலும் நிலுவை வருமானத்தை கண்ககிடும் பணிகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கைகள் எவையும் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்தக் காலப்பகுதிக்குரிய நிலுவை வருமானம் எவ்வளவு என்பது தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. எவ்வாறெனினும், 2009 ஆம் ஆண்டிற்கு முன்னைய 13 வருடங்களுக்காக அப்போது அறவிடப்பட்டிருந்த நிலுவை வரி வருமானம் ரூபா 34.9 மில்லியன் ஆகும். | அனைத்து அறிக்கைகளையும் தாமதமின்றி சமர்ப்பித்தல் | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) உரிய முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் 08 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 27 சதவீதம் எஞ்சியிருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகளை தயாரித்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) நி.பி 66 இன் மூலம் 06 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் 17 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான சதவீதமானது வேறு | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகளை தயாரித்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை |

செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், மேலும் 08 செலவின விடயங்களுக்குரிய மதிப்பீட்டுப் பெறுமதியின் 12 முதல் 560 சதவீதம் வரையான வீதாசாரமானது ஏனைய செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது.

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 267/2018 ஆம் இலக்க மற்றும் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளை கவனத்திற்கொள்ளாது, 2018 ஆம் ஆண்டினுள் 05 சந்தர்ப்பங்களில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ரூபா 274,501 தொகையான கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களுடன் அறிக்கையிடப்பட்டிராததுடன், அவை 2019 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கமைய செயற்பட்டு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 2.4 முற்பணங்களை வெளியிடல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மரணமடைந்தவர்களின் 05 வருடங்களை விட விஞ்சியிருந்த ரூபா 755,811 கூட்டுத்தொகையான 16 கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. | அனைத்து கடன் மீதிகளும் தாமதமின்றி ஏற்பாடுகளுக்கமைய தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண “பீ” கணக்கு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள (அ)-(எ) வரையான அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். பழைய நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்காக இது வரையிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளதுடன், தொடர்ந்தும் அது |

| | | |
|---|---|---|
| | | தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) நி.பி 485(4) மற்றும் 89 ஆம் இலக்க மற்றும் 1993 ஒக்தோபர் 22 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மூன்று மாதங்களினுள் தீர்க்கப்பட வேண்டும். எனினும், இடமாற்றம் பெற்றுச்சென்ற போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாத ரூபா 226,230 கூட்டுத்தொகையான 04 கடன் மீதிகள் காணப்பட்டதுடன், அவற்றை தீர்ப்பதற்கான தாமதக் காலமானது 05 வருடங்களை கடந்திருந்தது.<br><br>(இ) ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்ட 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 302,722 தொகையான மீதியானது 05 வருடங்களை விட பழமையானதாகும். | அனைத்து கடன் மீதிகளும் தாமதமின்றி ஏற்பாடுகளுக்கமைய தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பீ" கணக்கு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள (அ)-(எ) வரையான அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். பழைய நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்காக இது வரையிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளதுடன், தொடர்ந்தும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஈ) இறுதித் தவணை அறவிடப்பட்டு 05 வருடங்களை கடந்திருந்த பணி நீக்கம் செய்யப்பட்ட 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1.3 மில்லியனான கடன் மீதிகள் அந்த கடன்படுநர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1.1 மில்லியன் கூட்டுத்தொகையான 17 மீதிகள் காணப்பட்டன.<br><br>(உ) இறுதித் தவணை அறவிடப்பட்டு 02 வருடங்களை கடந்திருந்த சேவையை கைவிட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 185,388 கடன் மீதிகள் அந்த கடன்படுநர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கடன் மீதிகளும் தாமதமின்றி ஏற்பாடுகளுக்கமைய தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பீ" கணக்கு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள (அ)-(எ) வரையான அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். பழைய நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்காக இது வரையிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள் |

| | | |
|---|---|---|
| | | ளதுடன், தொடர்ந்தும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஊ) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கூட்டுத்தொகை மற்றும், அத்திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் புத்தகங்களுக்கமைவான மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 2.2 மில்லியனான வேறுபாடொன்று காணப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்கள் உரிய பதிவேடுகள் மற்றும் மூல ஆவணங்களுடன் இணக்கம் செய்யப்பட்டு கணக்கு வைத்தல். | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண “பீ” கணக்கு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள (அ)-(எ) வரையான அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். பழைய நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்காக இது வரையிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளதுடன், தொடர்ந்தும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (எ) திறைசேரி கணனி அச்சீடுகளுக்கமைய முற்பணக் கணக்கின் 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதி மற்றும் அந்த ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தல்களின் பெறுமதிகள், அந்த வருடத்தின் முற்பண பீ கணக்கில் அந்த மீதியுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 2.48 மில்லியன் கூட்டுத்தொகையான வேறுபாடு நிலவியது. எனினும், திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் கணனி அச்சீட்டு ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு திருத்தப்படாமைக்கு காரணமாக அமைந்த விடயங்களை காட்டும் கூற்றில் அந்த வேறுபாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) திறைசேரி கணக்கு அச்சீட்டிற்கமைய ஆகக்கூடிய செலவின எல்லை மற்றும் முற்பண பீ கணக்கின் வருடாந்த இணக்கக்கூற்றின் பிரகாரம் அந்த மீதிகளுக்கிடையே ரூபா 10 மில்லியனான இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று நிலவியது. அது தட்டச்சு பிழையென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | உச்ச செலவின எல்லை ரூபா 35 மில்லியனுக்காக தாமத வழுவொன்றினூடாக ரூபா 25 மில்லியன் என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஐ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 2018 திசெம்பர் 01 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அத்திகதியில் உள்ளபடியான முற்பணக்கணக்கின் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 5,000 ஆன இணக்கமின்மையொன்று நிலவியது. அவ்வாறே ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட | - மேற்படி - | இந்த வேறுபாடு ஆண்டின் ஆரம்பம் முதல் முன்கொண்டு வரப்படுவதுடன், பின்னர் திருத்தப்பட்டுள்ளது. |

கொடுப்பனவுகளுக்கிடையே ரூபா 1.5 மில்லியன் மற்றும் பெறுவனவுகளுக்கிடையே ரூபா 1.5 மில்லியனான வேறுபாடும் நிலவியது.

### 2.5 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 03 வைப்புக் கணக்குகளுக்குரிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 02 வருடங்களை விஞ்சிய ரூபா 24.68 மில்லியன் வைப்பு மீதிகள் 31 தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த பெறுமதியினுள் ரூபா 24.4 மில்லியனான ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய பணமும் காணப்பட்டது. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கமைய செயற்பட நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நி.பி 571(1) இன் பிரகாரம், ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலாவதியான அனைத்து வைப்புக்கள் தொடர்பான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கமைய செயற்பட நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 03 வைப்புக் கணக்குகளின் தனிப்பட்ட மீதி பட்டியல்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மாவட்ட செயலகங்களின் ரூபா 7.6 மில்லியனான வைப்பு மீதிகள் காணப்பட்ட போதிலும், அத்திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த வைப்பு வகைகளுக்கமைய வைப்பு மீதிகளின் பொழிப்பில் அந்த மீதிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடக்கப்படும் வகையில் அறிக்கைகளை தயாரித்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) வைப்புச் செய்யப்பட்ட பணம் மீளச் செலுத்தப்பட வேண்டியவர்கள் காணப்பட்டால் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறல்லாது ரூபா 285,284 ஆன 26 வைப்புக்கள் தீர்க்கப்படாத காசோலைகளாக வைப்புக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான முறையில் அறிக்கைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முன்னர் தற்காலிக பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றும் போது இந்த தவறு |

| | | |
|---|---|---|
| | | இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் பொது வைப்புக் கணக்கிற்கு மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் வெவ்வேறாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றுக்களில் ரூபா 107,498 ஆன இனங்காணப்படாத கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 118.490 ஆன இனங்காணப்படாத பெறுவனவுகள் காணப்பட்டதுடன், அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் உரிய முறையில் இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்த இணங்கப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு தவறுகளை திருத்தும் குறிப்புகளாக பதிவு செய்யப்பட்டவை என்பதுடன், உண்மையான பெறுவனவுகள் / கொடுப்பனவுகள் அல்ல என்பதைத் தெரிவிக்கின்றேன். இவை வங்கி இணக்கக்கூற்றுகளை தயாரிக்கும் போது இனங்காணப்பட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 507,148 கூட்டுத்தொகையான காசோலைகள் காணப்பட்ட போதிலும், அவை நி.பி 396(ஈ) இன் பிரகாரம் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த பெறுமதியினுள் வருடத்தை விஞ்சிய ரூபா 107,543 ஆன காசோலைகளும் காணப்பட்டன. | நிதிப்பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுத்தல். | 06 மாதங்களை கடந்த வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு வங்கி இணக்கக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இனங்காணப்பட்டு அவற்றை வருமானத்திற்கு |

செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சேவை பெறுநர்களுக்கு வாகன பரிசோதனை அறிக்கையினை செயற்திறனாக வழங்குவதற்காக ஜேர்மன் அரசின் வெகுமதியொன்றாக வேரஹெர வாகனப் பரீட்சிப்பு நிலையத்திற்கு 2004 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற 08 பரிசோதனை உபகரணங்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. அந்த உபகரணங்கள் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்டவையான போதிலும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் தற்போது அதனை விட புதிய தொழில்நுட்பத்துடனான உபகரணங்கள் சந்தைக்கு பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையால், ஒப்பீட்டு ரீதியாக அவற்றின் தொழில்நுட்ப தரம் குறைவடைந்திருந்தது. | தேவையினை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்தல் மற்றும் மிகவும் இலாபமான முறையில் காலரீதியான தீர்மானங்களை எடுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வெரஹெர அலுவலகத்திற்கு 500 கிலோவற் இயலளவுடைய மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட பின்னர் 200 வற்களான முன்னர் காணப்பட்ட இயந்திரத் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட்டு மற்றுமொரு பிரிவில் தாபிப்பதற்கு அல்லது அவ்வாறில்லையாயின் கைதவிர்ப்பதற்கு அல்லது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அது தொடர்ச்சியாக அந்த பிரிவிலேயே பயன்படுத்தப்படாது காணப்பட்டமையால், அதன் சேவை உடன்படிக்கை மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 451,720 தொகையும் விளைவற்றுக் காணப்பட்டது. | i) அரசிற்கு இலாபமான முறையில் தீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>ii) மின்பிறப் | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>பதில்கள் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பணிகள் திணைக்களத்தினால் லங்க ஓட்டோமொபைல் சங்கத்திற்கு ஒப்படைத்தமையால் இலக்கம் 1594/27 மற்றும் 2009 மார்ச் 26 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 2009 இன் 01 ஆம் இலக்க சாரதிகள் அனுமதிப்பத்திரம் (மிகை அறவீடுகள்) கட்டளைகளுக்கமைய திணைக்களத்தினூடாக வருமான ஈட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன், ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வெளியிடப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் எதுவும் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படவில்லை. அவ்வாறே, இந்த பணிக்காக லங்கா ஓட்டோமொபைல் சங்கம் மற்றும் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையே எவ்வித எழுத்துமூல இணக்கப்பாட்டிற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதற்கான சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | பாக்கி இயந்திரம் உரிய முறையில் பயன்படுத்தப்படல்.<br><br>iii) அரசிற்கு வருமானமொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பணிகளை திட்டமிடல | வழங்கப்பட்டிருக்கவில்லை.<br><br>பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வேரஹெர அலுவலக வளாகத்தில் நடாத்திச் செல்லப்படும் மெட்டிரோ பொலிட்டன் நிறுவனம், தேசிய போக்குவரத்து மருந்து நிறுவனம், பால் நிலையம் போன்ற நிறுவனங்களால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் நீர் மற்றும் மின்சாரத்திற்காக எவ்விதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிறுவன வளாகத்தினை பயன்படுத்துவதற்காக அந்த நிறுவனங்கள் திணைக்களத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அரசிற்கு இலாபமான முறையில் தீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.3 செயற்பாட்டு நலிவுகள்**

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|---|
| (அ) | சேவை பெறுநர்களால் திணைக்களத்தின் கணக்கிற்கு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொடுப்பனவிற்கும் ரூபா 30 ஆன தொகை திணைக்கள வளாகத்திலுள்ள மக்கள் வங்கியின் | அரசிற்கு இலாபமேற்படும் வகையில் தீர்மானம் | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கிளையினால் அறவிடப்பட்ட போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடத்தை பயன்படுத்துவதற்காக அந்த வங்கியிலிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே திணைக்களத்தின் வளாகத்தினுள் காணப்படும் பால் நிலையம், காப்புறுதி நிறுவனம், நகலெடுக்கும் விற்பனை நிலையம் போன்ற ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை, மற்றும் வாடகை அறவிடக்கூடிய நிறுவனங்களிடமிருந்து வாடகை அறவிடலை தேடிப் பார்த்தல் | |
| (ஆ) | வேரஹெர வளாகத்தில் கோவைகள் களஞ்சியப்படுத்துவதற்கு முன்னர் தற்காலிகமாக கோவைகள் களஞ்சியப்படுத்துவதற்காக கோவைகளை வைத்திருப்பதற்காக 18 கொள்கலன்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(i) 06 கொள்கலன்களின் கோவைகள் உரப் பைகளில் இடப்பட்டு முறையற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பராமரிப்பு இல்லாமையால் 02 கொள்கலன்களில் காணப்பட்ட வாகனக் கோவைகள் உக்கியவாறு காணப்பட்டது. | வாகனக் கோவைகள் பாதுகாப்பதற்காக தாமதமின்றி பொருத்தமான நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு மற்றும் ஒப்படைப்புகளைப் போன்றே “வை” தொகுதியின் முச்சக்கர வண்டிகளின் ஆவணங்கள் புதிய பதிவேட்டு அறையில் அடுக்கி வைப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாமையால் அவை தொடர்ந்தும் கொள்கலன்களினுள் பாதுகாப்பற்றுக் காணப்பட்டது. | அனைத்து கோவைகளையும் அடுக்குவதற்காக எழுத்துமூல அறிவுரைகளை வழங்குதல் மற்றும் அந்த பணிகளை தொடர்ச்சியான மேற்பார்வைக்கு உட்படுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) சர்வதேச தகவல் தொழில்நுட்ப நியமங்களுக்கு முரணாக காப்புக் கோவைகள் (Backup) அனைத்தும் பதிவேட்டு அறையின் கோவைகளில் விபரங்கள் உள்ளடங்கிய தகவல் கட்டமைப்பொன்றுக்குரிய சர்வீர் இயந்திரத்தினுள் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | காப்புக் கோவைகள் பிறிதொரு இடத்தில் சுயாதீனமாக பேணுதல். | |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நி.பி 177(1) இன் பிரகாரம் சேகரிக்கப்படும் பணங்கள் கூடியளவு விரைவாக வங்கியில் இடப்பட வேண்டிய போதிலும் வெரஹெர அலுவலகத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் பணம் அதற்கு அடுத்த நாள் வங்கியிலிடும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. அதற்கமைய, வெள்ளிக்கிழமைகளில் சேகரிக்கப்படும் பணம் அதற்கடுத்த திங்கள்கிழமை வரையிலும் பிரதான சிராப்பரின் பாதுகாப்பு பெட்டகத்தில் நிறுத்தி வைக்கப்படும் இதன் காரணமாக பணம் முறையற்ற பாவனைக்கு உட்படும் அச்சுறுத்தலொன்று நிலவக்கூடியதுடன், 15 சந்தர்ப்பங்களில் ரூபா 39.6 மில்லியன் பணம் 04 முதல் 05 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக 03 மாத தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய நாளொன்றிற்கு நிறுத்தி வைக்கப்படும் சராசரி தொகையானது சுமார் 03 மில்லியனாகும். | (i) நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க செயற்படல்.<br><br>(ii) இந்த நிலைமையை தவிர்ப்பதற்காக சேவை வழங்குனர்களுக்கும் தமது சேவைக் கட்டணங்களை நேரடியாக வங்கியில் இடக்கூடிய வகையில் வேரஹெர அலுவலக வளாகத்தினுள் அரச வங்கியின் கிளையொன்றினை நிறுவுதல் தொடர்பில் கவனம் செலுத்தல். | வேரஹெர அலுவலகத்தில் சேகரிக்கப்படும் பணம் நாள்தோறும் வங்கியிலிடுவற்காக மக்கள் வங்கியுடன் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | வேரஹெர அலுவலகத்தில் புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களுக்காக ஆன்லைன் முறையில் (Online) பரீட்சைகளை நடாத்துவதற்கு பரீட்சை மண்டபத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 41.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 08 பேரை கொண்ட பதவியணியொன்று நாளாந்தம் இதில் கடமையில் ஈடுபடுகின்றனர். இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு ஆகும். | வெளிப்படைத் தன்மையுடன் பரீட்சைகளை நடாத்துவதற்கு தேவையான பிரமாணங்களை உருவாக்கி, அவற்றை நாளதுவரையாக பேணிச் செல்லல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (i) | 03 பரீட்சை தடவைகள் நாளாந்தம் நடாத்தப்படுவதுடன், அதற்காக ஒரு தடவைக்கு 143 அபேட்சகர்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒரு தடவைக்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | அபேட்சகர்களை பதிவு செய்தல் 120 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டமையால், ஒவ்வொரு நாளும் 69 கணனிகளின் மிகையொன்று காணப்பட்டது. எவ்வாறெனினும், அந்த மிகையினை பயன்படுத்தி சிறப்பான கடவுச்சொல் வசதியினூடாக மேலதிக விண்ணப்பதாரர்களிடமிருந்து பணம் அறவிடப்படல் தொடர்பில் எவ்விதமான சான்றுறுதிப்படுத்தலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | வெளிப்படைத் தன்மையுடன் பரீட்சைகளை நடாத்துவதற்கு தேவையான பிரமாணங்களை உருவாக்கி, அவற்றை நாளதுவரையாக பேணிச் செல்லல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இந்த விசேட கடவுச் சொற்களை பயன்படுத்தும் வசதிகள் 51 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனுள் வேரஹெர அலுவலகத்தின் 16 உத்தியோகத்தர்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவர்களுள் 14 பேர் பதவிநிலை தரமற்ற உத்தியோகத்தர்களாவர். | வெளிப்படைத் தன்மையுடன் பரீட்சைகளை நடாத்துவதற்கு தேவையான பிரமாணங்களை உருவாக்கி, அவற்றை நாளதுவரையாக பேணிச் செல்லல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பரீட்சைப் பிரிவிற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள உதவிப் பதவியணிக்காக இடமாற்றங்கள் வழங்கப்பட்டிராததுடன், அவர்கள் 06 முதல் 13 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக நாளாந்தம் இந்தப் பணிகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காக 2016 ஆம் ஆண்டினுள் இரண்டு சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட 8,400 லீட்டர்கள் எரிபொருளுக்காக ரூபா 798,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவை மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பான தகவல்கள் எவையும் காணப்படவில்லை. | செலவினங்களுக்காக போதியளவான சான்றுகளை கோவைப்படுத்தி வைத்திருத்தல் | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 3.6, 3.9, 11.2 மற்றும் 11.6 ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தமது வளங்களை வினைத்திறனாக | 2017 இன் 19 ஆம் இலக்க நிறைபேறான அபிவிருத்தி | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் இதுவரையிலும் அதன் நோக்கங்களை இனங்கண்டு அவற்றை அடைவதற்குரிய நிகழச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுத்தல் | |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரை</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| (அ) 05/2012 ஆம் இலக்க மற்றும் 2012 திசெம்பர் 30 ஆந் திகதிய திணைக்களத்தின் உள்ளக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கமைய ஒரே இடத்தில் 05 வருடங்களை சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர் ஒருவர் மற்றுமொரு சேவை நிலையத்திற்கு மாறப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேரஹெர அலுவலகத்தின் 07 உத்தியோகத்தர்கள் மற்றும் 05 பேர் முறையே 11 வருடங்கள் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இந்த சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த நிலைமை தொடர்பில் அதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது திருத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கமைய செயற்பட்டு உரிய சேவைக்காலத்தினை நிறைவு செய்துள்ள உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்தல் | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 92 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தி வெற்றிடங்களை நிரப்புவற்கு நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |